**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **63/2025** |
| **பெயர்:** | **அந்தோணிச்சாமி** |
| **தந்தை பெயர் :** | **சந்தியாகு** |
| **வயது:** | **62/2025** |
| **ஊர்:** | **புனல்வாசல்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **விவசாயம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **07th day of April 2026**
**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11:16 AM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**
**எதிரி ஆஜர்.**
**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி. M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் B.Sc பட்டதாரி ஆவேன். நான் புனல்வாசலில் குடியிருக்கிறேன் என்றால், சரிதான். நான் குடியிருக்கும் இடத்திலிருந்து புகார்தாரர் ஊருக்கு எவ்வளவு தொலைவு என்றால், சுமார் 30 கி.மீ. இருக்கும். எனக்கும் புகார்தாரருக்கும் எத்தனை வருடம் பழக்கம் என்றால், சுமார் 25 – 30 வருடம் ஆகும். எனக்கும் புகார்தாரருக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்றால், ஆரம்பகாலத்தில் இருந்தே நாங்கள் இருவரும் நண்பர்கள் ஆவோம்.

2. எனக்கு புகார்தாரர் மற்றும் எதிரியின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு பரிட்சயம் உண்டா என்றால், உண்டு.

3. எதிரி அன்பரசனை எனக்கு எத்தனை ஆண்டுகளாக எனக்கு பழக்கம் என்றால், சுமார் 20 வருடங்கள் பழக்கம். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால், இல்லை. என்னை இவ்வழக்கில் புகார்தாரர் எப்போது ஒரு சாட்சியாக என்னை சேர்த்தார் என்றால், நான்தான் எதிரிக்கு புகார்தாரரிடம் பணம் வாங்கிக்கொடுத்தேன், அதனால் புகார்தாரர் என்னை இவ்வழக்கில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார், நீதிமன்றத்தில் புகார்தாரர் எப்போது என்னை ஒரு சாட்சியாக சேர்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

4. புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிருபணவாக்கு மூலம் ஆகியவற்றில் எதிரிக்கு பணம் வாங்கி கொடுத்த எனது பங்களிப்பு அதில் கூறப்பட்டுள்ளதா என்றால், கூறப்பட்டுள்ளது, நான் படித்துப்பார்த்தேன்.

5. இவ்வழக்கிற்கு முன்பாக என்மூலமாக எதிரியானவர் புகார்தாரரிடம் பலமுறை பணம் பெற்றுள்ளாரா என்றால், பலமுறை பெறவில்லை, ஒன்று அல்லது இரண்டு முறை ரூ.10,000/- , ரூ.25,000/- பெற்றிருந்தார். அந்த பணத்தை எதிரியானவர் நேர்மையாக திருப்பி கொடுத்தாரா என்றால், என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்.

6. நான் குடியிருக்கும் இடத்தில் இருந்து எதிரி வசிக்கும் பொக்கன்விடுதி எவ்வளவு தூரம் என்றால், சுமார் 4 முதல் 5 கி.மீ. இருக்கும். பொக்கன்விடுதியில் இருந்து திருச்சிற்றம்பளம் எவ்வளவு தூரம் என்றால், சுமார் 1 கி.மீ. இருக்கும்.

7. நான் எனது முதல்விசாரணையில் எதிரியானவர் அன்பு மெடிக்கல்ஸ் திருச்சிற்றம்பளத்தில் நடத்திவருகிறார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். எதிரியானவர் அந்த கடையை நடத்துவதற்கு உரிமம் இருக்கிறதா என்பதை நான் பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை. எதிரியானவர் திருச்சிற்றம்பளத்தில் அன்பு மெடிக்கல்ஸ் நடத்தவில்லை என்றும், அதற்கு அவரிடம் உரிமம் இல்லை என்று சொன்னால், சரியல்ல. எதிரி சொந்த ஊரான பொக்கன் விடுதியில் எதிரிக்கு அன்பு மெடிக்கல்ஸ் என்று எதுவும் இல்லை என்றால், சரிதான்.

8. எதிரியானவர் அவர் வசிக்கும் பொக்கன்விடுதியில் அன்பு மெடிக்கல்ஸ் நடத்திவருகிறார் என்று புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிருபணவாக்கு மூலம் ஆகியவற்றில் கூறியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது.

9. புகார்தாரரிடம் எதிரியானவர் அவர் திருச்சிற்றம்பலத்தில் வைத்துள்ள அன்பு மெடிக்கல்ஸ் கடையை விரிவுபடுத்துவதற்காகதான் ரூ.10,000,00/-

கேட்டார் என்று சொன்னால், சரிதான்.

10. நான் எனது முதல் விசாரணை/நிருபணவாக்குமூலத்தில், எதிரிக்காக பணம் வாங்குவதற்கு சாட்சியாக வலசைக்காடு பாலு மற்றும் ராஜேந்திரன் ஆகியோரை அழைத்து சென்றேன் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். வலசைக்காடு பாலு மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களின் தந்தை பெயர் என்னவென்றால், பாலுவின் தந்தை பெயர் கணேசன், ராஜேந்திரன் தந்தை பெயர் ஞாபகம் இல்லை. புகார்தாரர் எதிரிக்கு பணம்கொடுத்த தேதியன்று கைலெட்டரோ அல்லது Pro note வாங்கினாரா என்றால், இல்லை. புகார்தாரர் ரூ.10,000,00/- பணத்தை வங்கிமூலமாகவோ அல்லது DD மூலமாகவோ கொடுத்தாரா என்றால், இல்லை, ரொக்கமாகதான் கொடுத்தார். புகார்தாரரிடம் அன்றைய தேதியன்று அவரிடம் பணம் என்பதால்தான் அவர் ரூ.10,000,00/- பணத்தை வங்கிமூலமாகவோ அல்லது DD மூலமாகவோ கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல, நான்தான் ரொக்கமாக வாங்கிகொடுத்தேன்.

11. எதிரியானவர் என்மூலமாக புகார்தாரரிடம் பணத்தை கேட்கவில்லை என்றும், எதிரியின் திருச்சிற்றம்பலத்தில் வைத்துள்ள அன்பு மெடிக்கல்ஸ் கடையை விரிவுபடுத்துவதற்காக பணத்தை கேட்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

12. எதிரியானவர் என்மூலமாக புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை என்றும், எதிரிக்கு திருச்சிற்றம்பலத்தில் அன்பு மெடிக்கல்ஸ் என்ற கடை இல்லை என்று சொன்னால், சரியல்ல. என்மூலமாக எதிரியானவர் புகார்தாரரிடம் பணம் பெற்றார் என்பதால் நான் ஏதேனும் ஆவணம் புகார்தாரருக்கு கொடுத்தேனா என்றால், நாணயத்தின் அடிப்படையில்தான் பணம் பெற்றுகொடுத்தேன்.

13. வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால், எதிரியானவர்தான் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரியானவர் கையொப்பத்தை தவிர வேறு எந்த விபரமும் பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் ரூ.10,000,00/-த்திற்காக காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் இவ்வழக்கு காசோலையை இவ்வழக்கிற்கு முன்பாக வேறு ஒரு கடனிற்கு 2021 ஆம் ஆண்டு வாங்கிய பணத்திற்காக கொடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலை என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் ஏற்கனவே பெற்ற கடனை தீர்த்துவிட்டார்

என்றும், அப்போது கொடுக்கப்பட்ட காசோலையை திருப்பி கேட்டபோது ஏற்பட்ட மனகசப்பினால், அந்த காசோலையை வைத்து புகார்தாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

14. இவ்வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தை தவிர வேறு எந்த சங்கதிகளையும் எதிரி பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு காசோலை எதிரியன் கையொப்பம் வேறுபாடு இருக்கிறது என்று திருப்பப்பட்டதால், எதிரியிடம் இதுகுறித்து ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால், எதிரியிடம் கேட்டபோது எதிரியானவர் என்னிடம் நான் உங்கள் முன்புதானே கையொப்பம் இட்டேன் என்றும், பணத்தை திருப்பி தவருவதாக கூறினார்.

15. இரண்டு முறை வழக்கு காசோலை எதிரியன் கையொப்பம் வேறுபாடு இருக்கிறது என்று திருப்பப்பட்டதன்பேரில் எதிரியை அழைத்துக்கொண்டு வங்கியில் அதை சரிசெய்ய ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால், எடுத்தேன், எதிரியானவர் வங்கிக்கு வர மறுத்துவிட்டார். என்னுடைய முதல்விசாரணையில் இந்த சங்கதியை நான் கூறியுள்ளேனா என்றால், விரிவாக கூறவில்லை, விசாரிக்கும்போது சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்தேன். புகார்தாரருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 12.01 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- மா. விசால் ஆனந்த்

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.